**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.</u>**

**<u>அ.வ.எண். 39/2016</u>**

இந்நீதிமன்றத்து கிரேடு – 3 பென்ஞ்ச் கிளார்க் திருமதி. தேவி அவர்களால் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்குமூலம் 1873–ஆம் ஆண்டு 10–வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று **2026 – ஆம் ஆண்டு மார்ச் மாதம் 06** – ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| **தேதி** | 06.03.2026 |
| **பெயர்** | **தெய்வசிகாமணி** |
| **த/பெ** | **தனபால்** |
| **சாட்சி** | **DW1** |

**விசாரணை தொடங்கும் நேரம்– 11.47.p.m**

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி –</u>**

7. வாதிகள் இந்த வழக்கில் எவ்வளவு விஸ்தீர்ணத்திற்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் தெரியாது. வழக்கு சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியும் அவை சர்வே எண் 174, 175, 176/1. அசல் வழக்கு எண் 94/1998, 25.04.1998–ல் நாங்கள் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கு தான் என்றால் சரிதான். அதில் பிறப்பித்த தீர்ப்பாணை வைத்துதான் நிறைவேற்றுகை மனு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். இந்த வழக்கை தாக்கல்செய்தபோது தனபால்ரெட்டி எங்கு வேலை பார்த்து வந்தார் என்றால் சிம்சனில் வேலை பார்த்து வந்தார். 2–ம் பிரதிவாதியின் அனுமதியின் பெயரில் சொத்தை பயிர் செய்து வந்ததாக அந்த வழக்கில் குறிப்பிட்டு இருந்தேன் என்றால் சரியல்ல.

8. பி.சா.ஆ–4 ஆவணத்தில் பக்கம் 3–ல் 1ம் பத்தியில் தனபால்ரெட்டி சிம்சனில் வேலை பார்த்து வந்ததால் 2ம் பிரதிவாதியை

பயிர் செய்ய அனுமதித்தார் என்று அதில் குறிப்பிட்டு இருந்தால் அது சரிதான் என்றால் சரிதான். மேற்சொன்ன வழக்கில் இராஜகோபால்ரெட்டிக்கு எதிராக எந்த பரிகாரமும் கோரவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ 1 ஆவணத்தின் ரங்கநாதநாயுடு 23.06.1997–ல் இராஜகோபால் ரெட்டி மற்றும் அவரின் பிள்ளைகளிடம் இருந்து கிரையம் வாங்கினார் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. எங்களுக்கு தெரியாமல் தான் வாங்கினார்கள். 25.04.1998–ல் தான் இந்நீதிமன்றத்தில் நாங்கள் வழக்கு தாக்கல் செய்தோம் என்றால் எங்களுக்கு அப்போது தான் தெரியவந்தது அதனால் தான் 1998 ல் தாக்கல் செய்தோம். வா.சா.ஆ 1 ன்படி அவர் 1997–ல் கிரைம் செய்தது தெரிந்தவுடன் தான் மேற்சொன்ன வழக்கில் தரப்பினராக சேர்த்தோம் என்றால் சரிதான்.

9. இராஜகோபால்ரெட்டியின் பிள்ளைகளை இந்த வழக்கில் சாட்சிகாளாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ–1 ஆவணம் செல்லாது என்று இந்நீதிமன்றத்தில் எந்த பரிகாரமும் கோரவில்லை என்றால் சரியல்ல. பி.சா.ஆ 10 வில்லங்க சான்றிதழ் 01.01.1987 லிருந்து 02.02.2016 வரை மனு செய்து வாங்கி உள்ளது என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் பி.சா.ஆ 10 ஆவணத்தில் என்ன சர்வே எண் உள்ளது என்றால் சர்வே எண் 177 உள்ளது. அதற்கு முன்பு கிரையம் எதையும் இல்லாமல் பி.சா.ஆ –10 வாங்கியுள்ளோம் என்றால் சரிதான். பி.சா.ஆ 6 ல் டெலிவரி எடுத்ததாக உள்ளது என்றால் சரிதான்.

10. பி.சா.ஆ 10–ல் ஜாரி காலத்தில் 35 செண்ட் நிலத்தில் 2 மாதம் பயிர் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் வழக்கு தாக்கல் செய்த போது வழக்கு சொத்தான 1 ஏக்கர் 25 செண்ட் விற்பனை செய்யப்பட்ட சொத்து என்றால் சரியல்ல. 06.04.1998 ல் ஜமுனாராணிக்கு ரங்கநாதநாயுடு மற்றும் அவரின் பிள்ளைகள் மூவரும் சேர்ந்து சொத்தினை

விற்பனை செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. மேற்சொன்ன வழக்கில் அவர்களை வேண்டுமென்றே தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. பி.சா.ஆ 5 ஆவணத்தில் உள்ள சொத்து விவரத்தில் உள்ள சொத்துக்களுக்கு மட்டும் தான் பிரதிவாதிகளுக்கு உரிமை உள்ளது என்றால் சரிதான். எனவே வழக்கு சொத்திற்கும் எங்கள் சொத்திற்கும் தொடர்பு இல்லை என்றால் சரியல்ல.

11. மேற்சொன்ன வழக்கில் இரங்கநாதநாயுடுவின் பிள்ளைகளையும், ஜமுனாராணியையும் தரப்பினார்களாக சேர்க்கவில்லை என்றால் அவர் வாங்கியதும் எனக்கு தெரியாது. விற்பனை செய்ததும் எனக்கு தெரியாது அதனால் சேர்க்கவில்லை. மேற்சொன்ன வழக்கில் இவ்வழக்கின் வாதி தரப்பினராக இல்லை என்றால் சரிதான். பி.சா.ஆ 9 ல் உள்ள முத்தம்மாள் என் தாயாரா என்றால் ஆம். சோழவரம் காவல் நிலைய ஆய்வாளர் மற்றும் எஸ்.பியிடம் பாதுகாப்பு கோரி மனு செய்திருந்தார் என்றால் சரிதான். இதில் வாதியோ, இராஜகோபால் நாயுடுவையோ தரப்பினாராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். மேற்சொன்ன வழக்கில் வாங்கிய தீர்ப்பாணை வைத்து மட்டுமே பாதுகாப்பு கோரி இருந்தார் என்றால் சரிதான். பழை எண் 175, புதிய எண் 175/4, பட்டா எண் 2841. நான் தலையிடக்கூடாது என்றும் சொத்து அவர்களுக்கு சொந்தம் என்றும் வாதி கோருகிறார் என்றால் சரியல்ல. அசல் வழக்கு எண் 94/1998-ல் பெற்றுள்ள தீர்ப்பு வாதியை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல.

**(மேலும் குறுக்கு விசாரணை செய்ய வேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்படுகிறது).**
**விசாரணை முடியும் நேரம். 12.21.p.m.**